முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2021 யூலை

## (101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2021-10-30
காலை
[9.00 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**
(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** நிதிக் கணக்கீட்டின் ஒரு நோக்கமாக இருப்பது:

(1) வணிகத்தின் ஊழியர்களை ஊக்கப்படுத்துவது

(2) வணிகத்தின் இலாபத்தன்மையை அதிகரிப்பது

(3) வணிகத்தின் நிதி நிலையைப் புரிந்துகொள்வது

(4) வணிகப் பொருள்களின் விற்பனை விலையைத் தீர்மானிப்பது.

**1.2** 2021 மார்ச் 31 இல், 2021 மார்ச் மாதத்திற்கான மின்சாரச் செலவினமாக ரூபா 25,000/- இனை **சமனல டிரேடர்ஸ்** பதிவு செய்திருந்தது. ஆயினும் கொடுப்பனவானது 2021 ஏப்ரல் மாதத்தில் செய்யப்பட்டிருந்தது.

மேற்படி கூற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) உரிம (அலகுசார்) எண்ணக்கரு        (2) அட்டுறு எண்ணக்கரு

(3) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு        (4) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு

**1.3** வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கும்போது கால வேறுபாடொன்றிற்கான உதாரணமொன்றாக பின்வருவனவற்றுள் எது கருதப்படுகின்றது?

(1) நேரடி வைப்பாக **சரத்** என்பவரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 25,000/- ஆனது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(2) காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 5,000/- கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(3) வழங்குநர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட ரூபா 23,000/- பெறுமதியான காசோலையானது கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(4) ரூபா 3,500/- தொகையானது தவறுதலாக வங்கியால் வரவுப்பதிவு (debited) செய்யப்பட்டது.

**1.4** கீழ்வரும் ஊடுசெயல்கள் தனியுடமை வியாபாரமான **நயனா வியாபாரத்தின்** 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும்:

| | ரூபா |
|---|---|
| 2020 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு | 1,800,000 |
| ஆண்டின்போதான எடுப்பனவுகள் | 175,000 |
| ஆண்டின்போது உரிமையாளரால் வியாபாரத்திற்கு மாற்றப்பட்ட அவரது தனிப்பட்ட மோட்டார் வாகனம் | 1, 000,000 |
| 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் | 490,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2021 மார்ச் 31 இல் உரிமையாண்மை (மூலதனம்) :

(1) ரூபா 3,465,000/- (2) ரூபா 3,115,000/- (3) ரூபா 2,465,000/- (4) ரூபா 2,115,000/-

**1.5** பின்வருவனவற்றிலிருந்து, சொத்துக்களில் குறைப்பை ஏற்படுத்தக்கூடிய ஊடுசெயலைத் தெரிவு செய்க.

(1) பொருள்களை விநியோகம் செய்வதற்காக கடனடிப்படையில் ரூபா 1,500,000/- பெறுமதியான மோட்டார் லொறி ஒன்றைக் கொள்வனவு செய்தல்

(2) வர்த்தக வங்கியொன்றிடமிருந்து ரூபா 1,000,000/- கடனொன்றைப் பெற்றுக்கொள்ளல்

(3) மீள்விற்பனைக்காக கடனடிப்படையில் ரூபா 350,000/- தொக்கு ஒன்றைக் கொள்வனவு செய்தல்

(4) கடன்கொடுத்தோர் ஒருவருக்கு ரூபா 250,000/- தொகையொன்றைக் கொடுப்பனவு செய்தல்

**1.6** பின்வருவனவற்றுள் கணக்கீட்டுச் செயன்முறையின் கணக்கீட்டு வெளியீடு ஒன்றாக அமைவது எது?

(1) வருமானக் கூற்று (2) விற்பனை நாளேடு

(3) நாட்குறிப்பேட்டு உறுதிச்சீட்டு (4) விற்பனை விபரப்பட்டியல்

**1.7** கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு (return) கொள்வனவாளர் ஒருவரால் பயன்படுத்தப்படும் மூல ஆவணம் (source document):

(1) செலவுக் குறிப்பு (Credit Note)

(2) கொள்வனவு விபரப்பட்டியல் (Purchase Invoice)

(3) கொள்வனவுக் கட்டளை (Purchase Order)

(4) வரவுக் குறிப்பு (Debit Note)

**1.8** தனிச்சிறப்பான (தனிப்பயனாக்கப்பட்ட) கணக்கீட்டு மென்பொருள் ஒன்றிற்கான ஓர் உதாரணம் பின்வருவனவற்றுள் எது?

(1) ACCPAC. (2) இருப்புக் கட்டுப்பாட்டு முறைமை

(3) விரைவுப் புத்தகம் (Quick Book) (4) SAGE.

**1.9** **ராமா டிரேடர்ஸ்** கண்டியில் ஒரு காணியை வைத்திருக்கிறது. 2021 மார்ச் 31 இலான **ராமா டிரேடர்ஸின்** நிதி நிலைக் கூற்றில் அதன் கொள்வனவு விலை ரூபா 5,000,000/- எனக் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2021 மார்ச் 31 இல் அந்தக் காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 6,000,000/- ஆக இருந்தது. இது தொடர்பான கணக்கீட்டு எண்ணக்கருவாக அமைவது :

(1) கொள்கை மாறாமை (Consistency) எண்ணக்கரு

(2) பொருத்தப்பாட்டு (Matching) எண்ணக்கரு

(3) வரலாற்றுக் கிரய (Historical Cost) எண்ணக்கரு

(4) தொடர்ந்தியங்கும் (Going Concern) எண்ணக்கரு

**1.10** **சம்பத் டிரேடர்ஸ்** 2021 சனவரி 01 ஆந் திகதி மோட்டார் லொறி ஒன்றை ரூபா 500,000/- இற்கு விற்பனை செய்திருந்தது. இது 2017 சனவரி 01 ஆந் திகதி ரூபா 1,600,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட லொறி ஆகும். நிறுவனத்தின் கொள்கையானது கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20% இல் மோட்டார் வாகனங்களைப் பெறுமானத்தேய்வு செய்வதாகும்:

மேலுள்ள தகவல்களின் அடிப்படையில், மோட்டார் லொறியின் விற்பனை மூலமான இலாபம்:

(1) ரூபா 500,000/- (2) ரூபா 180,000/- (3) ரூபா 1,600,000/- (4) ரூபா 900.000/-

*கீழே* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.11** உரிம (அலகுசார்) எண்ணக்கருவின்படி, வணிகமும் உரிமையாளரும் இரு வெவ்வேறு சுயாதீன உரிமங்களாகக் கருதப்படுகிறது.

**1.12** ஒவ்வொரு மாத இறுதியிலும் வணிக நிறுவனமொன்றின் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் தோன்றும் மீதியானது ஒவ்வொரு மாத இறுதியிலும் அந்த நிறுவனத்தின் வங்கிக் கூற்றில் காட்டப்படும் மீதிக்குச் சமனாக இருத்தல் வேண்டும்.

**1.13** பொது நாட்குறிப்பேடு என்பது ஒரு முதன்மைப் பதிவேடாகும்.

**1.14** செலவுகளும் வருமானங்களும் நிதி நிலைக் கூற்றுடன் நேரடித் தொடர்பைக் கொண்ட மூலகங்களாகும்.

**1.15** பொறுப்பு (பரிப்பு) என்பது கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக எழுகின்ற உரிமத்தின் தற்காலக் கடப்பாடு ஆகும்.

**1.16** தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** வணிகமொன்றின் இரண்டு (02) நாட்டதாரர்களைக் (stakeholders) குறிப்பிடுக.

**1.17** கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமைகளை நோக்கி நகர்வதற்கான காரணங்கள் இரண்டைக் (02) குறிப்பிடுக.

**1.18** நடைமுறைப் பரிப்புகளுக்கு (current liabilities) இரண்டு (02) உதாரணங்களைக் கூறுக.

**1.19** 2021 மார்ச் 31 இலான **ஜக்ஸன் டிரேடர்ஸின்** காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு மீதி (debit balance) ரூபா 435,000/- ஆக இருந்தது. இந்த மீதியானது கீழ்வரும் காரணங்களால் வங்கிக் கூற்று மீதியுடன் இணங்கவில்லை.:

- நேரடி வைப்பான ரூபா 25,000/- காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.
- 2021 மார்ச் 30 இல் வழங்கப்பட்ட ரூபா 75,000/- மதிப்புள்ள காசோலையொன்று கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.
- வங்கிக் கட்டணம் ரூபா 5,000/- காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2021 மார்ச் 31 இலான வங்கிக் கூற்றில் காட்டப்படக்கூடிய மீதியை இனங்காண்க.

**1.20** 2021 சனவரி மாதத்திற்கான **XYZ டிரேடர்ஸ்** இன் ஏடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | ரூபா |
|---|---|
| வியாபார வருமதிகள் (கடன்பட்டோர்) கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி – 2021 சனவரி 01 இல் | 500,000 |
| மாதத்திற்கான விற்பனை நாளேட்டு மொத்தம் | 400,000 |
| மாதத்திற்கான உட்திரும்பல் நாட்குறிப்பேட்டு மொத்தம் | 25,000 |
| மாதத்தின்போது கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு | 200,000 |

2021 சனவரி 31 இலான வியாபார வருமதிகள் (கடன்பட்டோர்) கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை இனங்காண்க. (02 புள்ளி வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

(A) **ஷாம்** என்பவர் 2021 மார்ச் 01 இல் சில்லறைக் கடை ஒன்றினை ஆரம்பித்தார். கீழ்வரும் ஊடுசெயல்கள் 2021 மார்ச் மாத காலப்பகுதியில் இடம்பெற்றிருந்தன:

| திகதி | ஊடுசெயல் |
|---|---|
| 01.03.2021 | ஆரம்ப மூலதனமாக ரூபா 1,000,000/- காசு முதலீடு செய்யப்பட்டது. |
| 02.03.2021 | மீள்விற்பனைக்காக கடனடிப்படையில் ரூபா 800,000/- பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |
| 05.03.2021 | மாதாந்த கடை வாடகை ரூபா 50,000/- செலுத்தப்பட்டது. |
| 10.03.2021 | ரூபா 500,000/- கிரயமான பொருள்கள் ரூபா 750,000/- காசுக்கு விற்பனை செய்யப்பட்டன. |
| 15.03.2021 | ஊழியர்களுக்கான சம்பளமாக ரூபா 150,000/- செலுத்தப்பட்டது. |
| 31.03.2021 | ரூபா 500,000/- வங்கிக் கடன் பெறப்பட்டது. |

**நீங்கள் செய்யவேண்டியது :**

மேற்கூறிய ஒவ்வொரு ஊடுசெயல்களின் தாக்கத்தையும் பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டில் **குறிப்பிடுக.**

*[தொக்கு + வியாபாரக் கடன்பட்டோர் + காசு = உரிமையாண்மை + பரிப்புக்கள்]*

(06 புள்ளிகள்)

(B) **சங்கா டிரேடர்ஸ்** என்பது ஒரு தனியுடமை வியாபாரமாகும். கீழ்வரும் கடன் அடிப்படையில் நிகழ்ந்த கொள்வனவு தொடர்பான தகவல்கள் 2021 மார்ச் மாதத்திற்கான வியாபாரத்தின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன:

| **திகதி** | **விபரப் பட்டியல் இல.** | **வழங்குநரின் பெயர்** | **விபரம்** | **கணியம் (எண்ணிக்கை)** | **அலகு ஒன்றின் விலை (ரூபா)** | **வியாபாரக் கழிவு** |
|---|---|---|---|---|---|---|
| மார்ச் 01 | 465 | நிமால் அன்ட் கோ. | அரிசி மூடைகள் | 50 | 500 | - |
| மார்ச் 10 | 950 | சமந்தா குரோசறி | சீனி மூடைகள் | 100 | 2,000 | - |
| மார்ச் 15 | 495 | நிமால் அன்ட் கோ. | அரிசி மூடைகள் | 100 | 500 | 5% |

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 மார்ச் மாதத்திற்கான **சங்கா டிரேடர்ஸின்** கொள்வனவு நாளேட்டைத் (கொள்வனவு நாட்குறிப்பேட்டைத்) **தயாரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**KDI டிரேடர்ஸ்** என்பது இறப்பர் பொருள்களைத் தயாரிக்கும் ஒரு கம்பனியாகும். கீழ்வரும் தகவல்கள் 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **KDI டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

| **விபரம்** | **ரூபா** |
|---|---|
| மூலப்பொருள் இருப்பு – 2020 ஏப்ரல் 01 இல் | 600,000 |
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 2,300,000 |
| புத்துருவாகும் வேலைகள் - 2020 ஏப்ரல் 01 இல் | 350,000 |
| நேர் கூலிகள் | 890,000 |
| மின்சாரம் | 360,000 |
| தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம் | 625,000 |
| நீர் | 180,000 |
| பொறி மற்றும் இயந்திரம் மீதான தேய்மானம் | 110,000 |
| கட்டடம் மீதான தேய்மானம் | 135,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2021 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு மீதிகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன:

| **விபரம்** | **கிரயம் (ரூபா)** |
|---|---|
| புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 290,000 |
| மூலப்பொருள் இருப்பு | 1,250,000 |

(2) தொழிற்சாலைக்குச் சொந்தமான கட்டடத்தின் 90% ஆன தரைப் பகுதியும் பொறி மற்றும் இயந்திரம் முழுமையாகவும் உற்பத்திச் செயன்முறைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

(3) கீழ்வரும் செலவினங்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும்:

| **செலவினம்** | **தொழிற்சாலை** | **அலுவலகம்** |
|---|---|---|
| மின்சாரம் | 90% | 10% |
| நீர் | 60% | 40% |

(4) நேர் கூலிகளைத் தவிர, உற்பத்தி செய்யப்படுகின்ற ஒவ்வொரு அலகிற்கும், அலகொன்றுக்கு ரூபா 100/- என்ற வீதத்தில் மேலதிக ஊக்கத்தொகையை உற்பத்திப் பணியாளர்கள் பெறுகின்றனர். ஆண்டின்போது உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் மொத்த எண்ணிக்கை 600 ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **KDI டிரேடர்ஸின்** உற்பத்திக் கணக்கைத் **தயாரிக்குக**.

(10 புள்ளிகள்)

## வினா 04

**ருபேறு டிரேடர்ஸ்** என்பது ரூபா 2,500,000/- இனை காசாக முதலீடு செய்தும் ரூபா 1,500,000/- பெறுமதியான தனது சொந்த மோட்டார் வாகனத்தை வியாபாரத்திற்கு மாற்றியும் 2020 ஏப்ரல் 01 இல் **ருபேறு** என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தனியுடமை வியாபாரமாகும்.

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசேடு (காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு) கீழ்வருமாறு:

| | **வரவு (ரூபா)** | | **செலவு (ரூபா)** |
|---|---|---|---|
| ஆரம்ப மூலதன முதலீடு | 2,500,000 | வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 1,300,000 |
| வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 1,800,000 | காசுக் கொள்வனவுகள் | 600,000 |
| காசு விற்பனைகள் | 900,000 | மின்சாரம் | 69,000 |
| | | சம்பளங்களும் கூலிகளும் | 93,000 |
| | | நீர் | 18,000 |
| | | மீதி மு.கொ.செ. | 3,120,000 |
| | **5,200,000** | | **5,200,000** |
| மீதி கீ.கொ.வ. | 3,120,000 | | |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) மோட்டார் வாகனம், கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானம் செய்யப்பட வேண்டும்.

(2) 2021 மார்ச் 31 இல் வருமதிகளும் சென்மதிகளும் கீழ்வருமாறு:

| **வருமதிகள் / சென்மதிகள்** | **ரூபா** |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 250,000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 390,000 |
| அட்டுறு மின்சாரக் கட்டணம் | 11,000 |
| முன் - செலுத்திய நீர்க் கட்டணம் | 2,000 |

**நீங்கள் செய்யவேண்டியது :**

2021 மார்ச் 31 இல் **ருபேறு டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 05

**RT டிரேடர்ஸ்** என்பது மின்சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. 2021 மார்ச் 31 இலான **RT டிரேடர்ஸின்** பரீட்சை மீதி இணங்காதிருந்ததுடன் ரூபா 31,000/- வித்தியாசம் இனங்காணப்பட்டது. வித்தியாசத்தைத் தொங்கற் கணக்கிற்கு செலவுப் பதிவு (crediting) செய்ததன் மூலம் வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, கீழ்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன:

(1) அலுவலகப் பாவனைக்காக 2021 மார்ச் 01 இல் மேற்கொள்ளப்பட்ட ரூபா 150,000/- பெறுமதியான அலுவலக உபகரணத்தின் கொள்வனவானது அலுவலக உபகரணப் பராமரிப்புக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அலுவலக உபகரணங்கள் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானம் செய்யப்படுகின்றன.

(2) வாடகைச் செலவுகள் ரூபா 150,000/- வாடகைச் செலவினக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப் படவில்லை. எவ்வாறாயினும், இதற்கான செலவுப் பதிவு சம்பந்தப்பட்ட பேரேட்டுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) காசுக் கொள்வனவு ரூபா 190,000/- கொள்வனவுக் கணக்கில் இரு தடவைகள் வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்த அதே வேளை காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) தனது தனிப்பட்ட பாவனைக்காக வியாபாரத்திலிருந்து உரிமையாளரால் எடுத்துக்கொள்ளப்பட்ட பொருள்களின் கிரயம் 98,000/- ஆக இருந்தது. இது எடுப்பனவுக் கணக்கில் ரூபா 89,000/- ஆக வரவுப்பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதற்கான செலவுப்பதிவு சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(5) கொள்வனவு நாளேட்டின் மொத்தம் ரூபா 50,000/- இனால் மிகைப்படுத்திப் (overstated) பதியப் பட்டிருந்தது.

(6) நிலையான வைப்பு மீது பெறப்பட்ட வட்டி ரூபா 2,500/- ஆனது கணக்கேடுகளிலிருந்து முற்றாக விடுபட்டிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் (07 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

***மில்கி டிரேடர்ஸ்*** என்பது ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2021 மார்ச் 31 இல் ***மில்கி டிரேடர்ஸின்*** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

***மில்கி டிரேடர்ஸ்***

**2021 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்: | | |
| காணியும் கட்டடமும் (காணியின் பெறுமதி - ரூபா 1,400,000/-) | 3,600 | |
| மோட்டார் லொறி | 1,600 | |
| அலுவலக உபகரணம் | 2,000 | |
| 2020 ஏப்ரல் 01 இல் திரள் பெறுமானத் தேய்வு: | | |
| கட்டடம் | | 500 |
| மோட்டார் லொறி | | 850 |
| அலுவலக உபகரணம் | | 1,200 |
| கொள்வனவுகள் | 73,000 | |
| விற்பனைகள் | | 114,000 |
| 2020 ஏப்ரல் 01 இல் தொக்கு | 8,200 | |
| காப்புறுதி | 1,560 | |
| வியாபார வருமதிகள் | 7,600 | |
| வியாபார சென்மதிகள் | | 5,400 |
| மின்சாரச் செலவுகள் | 9,600 | |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 2,100 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 22,500 | |
| வங்கிக் கட்டணங்கள் | 1,200 | |
| பெற்ற வாடகை வருமானம் | | 1,000 |
| கொடுத்த கழிவு | 390 | |
| விளம்பரப்படுத்தல் | 1,800 | |
| 2020 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு | | 20,000 |
| கையிலுள்ள காசும் வங்கி மீதியும் | 7,800 | |
| | **142,950** | **142,950** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2021 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கின் பெறுமதி ரூபா 10,200,000/-.

(2) வியாபாரத்தின் கொள்கையானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் பின்வருமாறு பெறுமானத் தேய்வு செய்வதாகும் :

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | ஆண்டிற்கு 10 % |
| மோட்டார் லொறி | : | ஆண்டிற்கு 20 % |
| அலுவலக உபகரணம் | : | ஆண்டிற்கு 25 % |

(3) ரூபா 1,560,000/- காப்புறுதியானது 2021 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்கு உரியதாகும்.

(4) **மில்கி டிரேடர்ஸ்** 2020 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து ரூபா 100,000/- என்ற மாதாந்த வாடகைக்கு தனது கட்டடத்தின் ஒரு பகுதியை **வரையறுக்கப்பட்ட XY கம்பனிக்கு** வாடகைக்கு விட்டுள்ளது. 2021 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான வாடகை வருமானம் 2021 ஏப்ரலில் பெறப்பட்டது.

(5) 2021 மார்ச் மாதத்திற்கான கீழ்வரும் செலவினங்கள் கணக்கேடுகளில் அட்டுறுவாகியிருக்கவில்லை. :

| | | |
|---|---|---|
| மின்சாரக் கட்டணம் | : | ரூபா 850,000/- |
| சம்பளங்களும் கூலிகளும் | : | ரூபா 1,800,000/- |

(6) கோவிட் 19 நோய்ப்பரவல் காரணமாக, வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து நிலையை அடைந்தவராகப் (bankrupt) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். இதனால் அவரிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 100,000/- நிலுவைத் தொகையை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்வதற்கு முகாமை தீர்மானித்திருக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (12 புள்ளிகள்)

(b) 2021 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |